1980 பிப்ரவரி 5]

கூடலூர் பகுதியில் நில ஆக்கிரமிப்பு.

* வினா எண் 42— திரு. கே. உச்சி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியிலுள்ள நில ஆக்கிரமிப்பாளர்கள் எத்தனை பேர்கள்?

(ஆ) அவர்களில் தலா மூன்று ஏக்கரோ அதற்கு அதிகமாகவோ வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்களுக்குப் பட்டா வழங்கி உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) கூடலூர் வட்டத்தில் ஆக்கிரமிப்பாளர் எண்ணிக்கை

(1) எண்ணிக்கை 3,895

(2) பரப்பளவு .. .. .. 8,360.9 ஏக்கர்

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகளில் 3·00 ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்கள் —

(1) எண்ணிக்கை 84

(2) பரப்பளவு .. .. .. 319.85 ஏக்கர்

மூன்று ஏக்கருக்கும் அதிகமாக உள்ளவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்ட எண்ணிக்கை விவரம் (பந்தலூர் நில ஒப்படைத் திட்டம்) —

(1) எண்ணிக்கை 2

(2) பரப்பளவு .. .. .. 8.49 ஏக்கர்

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே இன்னும் நிறைய பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை. அதனால் எல்லோருக்கும், மூன்று ஏக்கருக்கு மேலாக உள்ளவர்களுக்கும் பட்டா கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பதிவு செய்யப் புதிதாக இப்போது அங்கே ஒரு துணை தாசில்தாரை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17 ஆம் நாளில் இருந்து 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் வரை அந்த வேலையில் இருப்பார்கள். விடுபட்டதையெல்லாம் விரைவாகச் செய்ய ஆவன செய்வார்கள்.

திரு. கே. உச்சி : கணக்கெடுப்பு வேலைகள் மிகவும் தாமதப் படுத்தப்பட்டிருக்கிறது. வரக்கூடிய விண்ணப்பங்கள் உடனடியாகப் பரிசீலனைக்கு வருவதில்லையென்று பொதுமக்கள் குறை கூறுகிறார்கள். ஆகவே, அந்தப் பணிகளை சற்று முடுக்கிவிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த பிறகுதான தனியாக அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. என். கிட்டப்பா : நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தொகுதியில் நில ஆக்கிரமிப்பாளர்கள் எவ்வளவு பேர்கள் என்பது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆக்கிரமிப்பாளர்களில் தமிழ்நாட்டைச் சாராதவர்கள், இதையொட்டியிருக்கிற பிற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா ? அப்படியிருந்தால் அவர்கள் ஆக்கிரமித்துள்ள நிலப் பரப்பு எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ? அப்படியிருக்குமானால், அதைத் தவிர்க்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதைப் பிரித்துப் பார்ப்பது பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கு. ரமணி ; இந்திய நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள எந்த ஒரு பிரஜையும், இந்த நாட்டில் உள்ள எந்தப் பகுதியிலும் போய் குடியேறலாம், வியாபாரம் செய்யலாம் என்ற அரசியல் சட்ட உரிமைக்குட்பட்டு வேறு எந்த மாநிலத்திலிருந்தாவது கூடலூர் தாலூகாவிற்கு வந்திருந்தால், அவர்கள் அங்கு சாலை போட்டுக் குடியிருந்தால் அல்லது விவசாயம் செய்திருந்தால் அந்த நிலத்தை அவர்களுக்குச் சொந்தமாக்குவது தவறா. அரசாங்கத்தின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எல்லோரும் இந்த நாட்டினுடைய குடிமகன்கள் என்று இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது.

வெள்ளியணை கிராம முன்சீப்.

*வினா எண் 43 — திரு. க. சுப்பு : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், வெள்ளியணை கிராமம் (வடக்குப் பகுதி) கிராம முன்சீப் மீது கையாடல் குற்றத்திற்காக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், தற்போது அந்த வழக்கு எந்தநிலையில் உள்ளது ?